00034

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்
சட்டக்கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்
மட்டம் - 04

**LLU4607– ஒப்பந்தச் சட்டம்**

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை **II** - 2023/2024
காலம் : ஒரு (01) மணித்தியாலம்

திகதி : 13.12.2024 — நேரம்: பி.ப.01.30 - பி.ப.02.30

மொத்த வினாக்கள் இரண்டு (02)
ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

**1. i.** அமாயா எனும் உள்நாட்டு தொழில் முயற்சியாளர், "பிறைட்பில்ட் லிமிட்டட்" எனும் கட்டுமான கம்பனியுடன், தனது காரியாலயத்தின் பரப்பை மீள்திருத்தம் செய்வதற்காக ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்டாள். நிமல், மீள்திருத்தம் ஆனது இரு மாதங்களிற்குள் நிறைவு செய்யப்படும் என அமாயாவிற்கு உறுதியளித்தார். இந்த உறுதியானது வாய்மொழி மூலமானது என்பதுடன், பின்னர் கைச்சாத்திடப்பட்ட எழுத்திலான ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படவில்லை, பேச்சுவார்த்தைகளின் போது, நிமல் தனக்கு கட்டுமாணப்பணியில் உள்ள 15 வருட அனுபவத்தை சுட்டிக்காட்டி, தனது வாக்குறுதிகளை அமாயா நம்பலாம் என உறுதியளித்தார். உடன்படிக்கை ஆனது பின்னர் எழுத்திற்கு ஆக்கப்பட்டது. இவ் எழுத்திலான உடன்படிக்கை ஆனது பிறைட்பில்ட் ஆனது உயர் ரக பொருட்களை பாவனை செய்யும் என்றும், சகல உள்நாட்டு ஒழுங்கு விதிகளையும் பின்பற்றும் என்றும் குறிப்பிட்டது. எவ்வாறாயினும், இது நிறைவு செய்வதற்கான கால எல்லையை குறிப்பிடவில்லை. ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட கைச்சாத்திட்ட பின்னர் பிறைட்பில்ட் கட்டுமாணத்தில் தரம் குறைந்த பொருட்களை பாவனை செய்ய ஆரம்பித்திருப்பதை கண்டறிந்தாள். மேலும் இம்மீள்திருத்தச் செயற்றிட்டம் ஆனது, அவளது வியாபார நடவடிக்கைகளை பிரதானமாக சீர்குலைத்து, நான்கு மாதத்திற்கு நீட்டிக்கப்பட்டது.

அமாயா தற்போது ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு விரும்புவதுடன், இரண்டாந்தரப் பொருட்களிற்கும் தாமதத்திற்கும் நிவாரணம் கோருகிறாள். அமாயாவிற்கு அறிவுறுத்துக.
**(15 புள்ளிகள்)**

**ii.** ஒப்பந்தம் ஒன்றின் வாசகங்களை வரையறுப்பதில் *Hong Kong Fir shipping Co. Ltd Vs. Kawasaki Kisen Kaisha Ltd* (1962) 2QB 26, (1962) 1 ALL ER 474. என்பதன் முக்கியத்துவத்தை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

2. சட்டமுறையாக பிணிக்கும் ஒப்பந்தம் ஒன்றின் உருவாக்கத்தில் பிரதிபயன் மற்றும் நல்லேது என்பவற்றின் பரப்பு மற்றும் பிரயோகம் முதலியவற்றின் எல்லையொன்றை தயாரிக்குக. இவ்விரு கோட்பாடுகளிற்கும் இடையிலான வேறுபாடு தொடர்பான ஆராய்வு ஒன்றையும் உமது விடையில் உள்ளடக்குக.

**(20 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமை பெற்றது -